www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# S அரையாண்டுப் பொதுத் தேர்வு- 2024

## ஒன்பதாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி தமிழ் மதிப்பெண்கள்: 100

பகுதி - I

15×1=15

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:-**

1) "வாவி" என்பதன் பொருள்
அ) வண்டு ஆ) தேன் இ) பொய்கை ஈ) குற்றம்

2) நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

3) பகுபத உறுப்புகள் ________ வகைப்படும்
அ) 6 ஆ) 8 இ) 10 ஈ) 12

4) தமிழகத்தின் பெர்னாட்ஷா என அழைக்கப்படுபவர்
அ) அறிஞர் அண்ணா ஆ) பாரதிதாசன் இ) திருவள்ளுவர் ஈ) கம்பர்

5) சாரதா சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு ________
அ) 1929 ஆ) 1964 இ) 1930 ஈ) 1997

6) மரவேர் என்பது ________ புணர்ச்சி
அ) இயல்பு புணர்ச்சி ஆ) தோன்றல் இ) திரிதல் ஈ) கெடுதல்

7) சொல்லும், பொருளும் பொருந்தியுள்ளது எது?
அ) வருக்கை - இருக்கை ஆ) புள் - தாவரம்
இ) அள்ளல் - சேறு ஈ) மடிவு - தொடக்கம்

8) தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
அ) தேசிய திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
இ) தேசிய திறனறி, கல்வி உதவித்தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

9) தமிழ்விடுதூது - என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது
அ) புதுக்கவிதை ஆ) சிற்றிலக்கியம் இ) தனிப்பாடல் ஈ) செய்யுள்

10) திருநாதர் குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்கள் உள்ளவை ________
அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

11) 'பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும்' நிலப்பகுதி ________
அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) நெய்தல் ஈ) பாலை

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம் தீப்பட்டதென வெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு

12) பழனம் - என்பதன் பொருள்
அ) மண் ஆ) சேறு இ) பழமை ஈ) மிக்கவயல்

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



13) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்
அ) சிலப்பதிகாரம் ஆ) மதுரைக்காஞ்சி
இ) சீவகசிந்தாமணி ஈ) முத்தொள்ளாயிரம்

14) அரக்காம்பல் - இச்சொல்லைப் பிரித்தெழுதுக
அ) அரக்கு+ஆம்பல் ஆ) அரக்+காம்பல்
இ) அரக்காம்+பல் ஈ) அர+காம்பல்

15) இப்பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
அ) அள்ளல் - வெள்ளம் ஆ) அள்ளல் - பழனத்து
இ) கைச்சிறகு - கோக்கோதை

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி:- **4×2=8**
(21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க)

16) விடைகளுக்கேற்ற வினா அமைக்க
அ) சங்குகள் ஈனுகின்ற முத்துகள், முத்துபோல் இருக்கின்றன
ஆ) சோழநாட்டின் யானைப்படை வலிமையானது
ஆ) ஒரு நாட்டின் வளத்தைப் பாடுவதைப் புலவர்கள் கவிமரபாகக் கொண்டிருந்தனர்.

17) 'கண்ணி' என்பதன் விளக்கம் யாது?

18) "கூவல்" என்று அழைக்கப்படுவது யாது?

19) கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?

20) இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத்தகுந்த தமிழக வீரர்கள் யாவர்?

21) 'தலை' - என முடியும் குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- **5×2=10**

22) வல்லினம் மிகும் இடங்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டு தருக.

23) கலைச்சொல் தருக. அ) Sugarcane Juice ஆ) Saline soil

24) பிழைநீக்கி எழுதுக.
அ) பவளவிழிதான் பரிசு உரியவள்
ஆ) குழலியும் பாடத் தெரியும்

25) தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க
அ) சித்திரமும் கைப்பழக்கம் __________
ஆ) கல்லாடம் படித்தவரோடு __________

26) சொல்லுக்குள் சொல் தேடுக:
அ) பாய்மரக்கப்பல் ஆ) எட்டுக்கால்பூச்சி

27) செய்வினை - செயப்பாட்டுவினை விளக்குக

28) பகுபத உறுப்பிலக்கணம் தருக: விளைவது

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி:- 2×3=6

29) நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

30) முழுஉருவச்சிற்பங்கள் - புடைப்புச் சிற்பங்கள் வேறுபடுத்துக?

31) உரைப்பத்தியைப் படித்துப் வினாக்களுக்கு விடையளி.

வாய்மையே சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா. நாக்கு ஒரு அதிசயத் திறவுகோல் என்பர்.

வினாக்கள்:-

அ) எது சிறந்த அறம்

ஆ) அதிசயத் திறவுகோல் எது?

இ) உண்மையான நா எது?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.

(வினா எண். 34 கட்டாய வினா) 2×3=6

32) ஆண்டாளின் கனவுக் காட்சியை எழுதுக.

33) பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

34) "ஒன்றறிவதுவே" - எனத் தொடங்கும் பாடல் (அல்லது)

"அள்ளல் பழனத்து" - எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரம் பாடல்

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி:- 2×3=6

35) "தான்" என்னும் இடைச்சொல்லை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்?

36) தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக

37) பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.

அ) _______ பெரும் பொதுக்கூட்டம் (கடி, மா)

ஆ) _______ சிறந்தது (சால, மழ)

இ) _______ பசி (உறு, தவ)

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 5×5=25

38) அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்புகளை தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) ஏமாங்கத நாட்டின் வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.

39) அ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இணையவழிச் சேவை பற்றி எழுதுக. (அல்லது)

ஆ) "சமூகத்திற்கு எனது பணிகள்" - என்ற தலைப்பில் 5 வரிகளில் எழுதுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



40) அ) "எனது பயணம்" என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக. (அல்லது)

ஆ) உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

41) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



42) தமிழ் எண்களை எழுதுக.

அ) 120 ஆ) 100 இ) 320 ஈ) 1000 ஈ) 500

பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்:- 3×8=24

43) அ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இணையவழிச் சேவைகள் குறித்து விரிவாக எழுதுக. (அல்லது)

ஆ) நயம் பாராட்டுக

கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி - எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன் - கவிமணி

44) அ) நூலகம், நூல்கள் குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை? (அல்லது)

ஆ) எங்கள் ஊர் சந்தை - என்னும் தலைப்பில் நாளிதழ் செய்தி ஒன்றை எழுதுக.

45) அ) பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டி தொகுப்புரை எழுதுக. (அல்லது)

ஆ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை சுருக்கி எழுதுக.

********

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com